1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினா 591 மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; தலைவரவர்களே, 591, 592 இரண்டும் தொடர்புடையதாக இருப்பதால் இந்த இரண்டு வினாக்களையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன்.

வீராணம் ஏரி கால்வாய்கள்.

*வினா எண். 591—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீராணம் ஏரி பாசனத்தில் மாதிரி சிமிண்ட் வாய்க்கால் கட்டி தண்ணீர் வீண்விரயம் இல்லாமல் பாசனம் செய்ய அரசு திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம். வீராணம் ஏரி வாய்க்கால்களான லால்பேட்டை வாய்க்கால், வெள்ளியக்குடி வாய்க்கால் ஆகிய இரண்டையும் சீர்ப்படுத்தும் முன்னோடி திட்டத்திற்கு (Pilot Scheme) ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடந்தேறி வருகின்றன.

*வினா எண். 592—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் பெறும் லால்பேட்டை வாய்க்காலை நவீனப்படுத்தி எவ்வளவு ரூபாய்க்கு திட்டம் போடப்பட்டது?

(ஆ) எப்போது இத் திட்டம் முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் பெறும் லால்பேட்டை வாய்க்காலை நவீனப்படுத்தும் திட்டத்தின் மதிப்பீடு ரூ 8.10 இலட்சம் ஆகும்.

(ஆ) 1979 ஆம் ஆண்டு கோடை மூடு காலத்தில் பெரும் பகுதி வேலைகள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நந்தன் கால்வாய் திட்டம்.

*வினா எண். 593—திரு கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதியில் நந்தன் கால்வாய் திட்டத்தில் பனைமலை ஏரிவரை கால்வாய் வெட்டித்தர அரசு உத்தேசித்துள்ளதா?